செ.வெ.எண். 13 /2018

நாள் 09.01.2018
மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

## செய்தி

காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த வேளாண்மை பெருமக்களுக்கு, காஞ்சிபுரம் மாவட்டத்தின் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் ஜனவரி 2018-ஆம் மாத கூட்டம் 19.01.2018 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள மாவட்ட ஊராட்சி மன்ற அலுவலகம், வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் விவசாய பெருமக்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு முக்கிய வேளாண்மைத்துறை மற்றும் சார்பு துறைகள் தொடர்பான கோரிக்கை மனு அளிக்க விரும்பும் விவசாயிகள் கூட்ட அரங்கில் மனுக்கள் அளிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக
காஞ்சிபுரம்.

செய்தி வெளியிடுபவர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.